## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் குடிநீர்ப் பஞ்சம் மோசமான நிலைமையில் விரைவிலே ஏற்படவிருக்கிறது. எனவே, அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தையும், அரசின் கவனத்தையும் ஈர்ப்பதற்கு நான். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இன்று காலையில்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதுகுறித்து கேள்வி கேட்கப் போகிறார்கள் என்று சொன்னார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் notice–க்கு கொடுத்தனுப்பியிருக்கிறேன். பதில் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அது நாளை எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

### (ஆ) ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணைகள் கட்ட உத்தேசித்திருப்பது

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலம், கோலார் மாவட்டத்தில், நந்திதுர்காவில் உற்பத்தியாகும் பாலாறு, கர்நாடக மாநிலத்தில் 93 கிலோ மீட்டரும், ஆந்திர மாநிலத்தில் 33 கிலோ மீட்டரும், தமிழகத்தில் 222 கிலோ மீட்டரும் பயணித்து, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அருகில் உள்ள கூவத்தூரில் வங்கக் கடலில் கலக்கிறது. வாணியம்பாடி, புள்ளூர் முதல் காஞ்சிபுரம் மாவட்டம், கூவத்தூர் வரை சற்றேறக்குறைய 4½ இலட்சம் எக்டர் நிலம் பாசன வசதி பெறுகிறது. வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம் மற்றும் சென்னை மாவட்டம் என ஐந்து மாவட்டங்களில் விவசாயம் மற்றும் குடிநீர் ஆதாரமாக பாலாறு விளங்கி வருகிறது. இந்தப் பாலாற்றுநீர் சுமார் 1½ கோடி மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கி வருகிறது. ஆந்திர அரசு தனது மாநிலத்தில் 33 கிலோ மீட்டர் தூரம் பயணிக்கக்கூடிய பாலாற்றின் குறுக்கே ஏற்கெனவே கட்டியுள்ள 21 தடுப்பணைகளைப்*

*2019 பிப்ரவரி 12]* [திரு. ஏ.பி. நந்தகுமார்]

*புதுப்பிக்கவும், பழுதுபார்க்கவும் சுமார் ரூ.43 கோடியை ஒதுக்கியுள்ளது. மேலும், புதிதாக 500 மீட்டர் இடைவெளியில் சுமார் 30 புதிய தடுப்பணைகளைக் கட்டவுள்ளதாக கடந்த 18–11–2018 அன்று செயற்பொறியாளர், நீர்வள வடிநிலக் கோட்டம் அவர்களும், கண்காணிப்புப் பொறியாளர் அவர்களும், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆந்திர மாநில அரசாணை எண்* RT No.*202, நாள் 9–11–2018–ன்படி ஆதாரபூர்வமாகக் கடிதம் அனுப்பியுள்ளனர். ஆகவே, ஆந்திர அரசு, சற்றேறக்குறைய 33 கிலோ மீட்டர் தூரமே பயணிக்கக்கூடிய பாலாற்றின் குறுக்கே 500 மீட்டர் இடைவெளியில் 21 தடுப்பணைகளைக் கட்டிக் கொண்டிருக்கின்ற நிலையில், நம்முடைய அரசு, மேற்கண்ட ஐந்து மாவட்ட மக்களின் நீர் ஆதாரத்திற்கு வளம் சேர்க்கின்ற வகையில், 222 கி.மீ. தூரம் பயணிக்கக்கூடிய பாலாற்றின் குறுக்கே சற்றேறக்குறைய 5 கிலோ மீட்டர் இடைவெளியில் ஒரு தடுப்பணை வீதம் கட்டி, அந்த ஐந்து மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரத்தைப் பெருக்க வேண்டுமென்றும், இப்படி ஆந்திர அரசு அந்தத் தடுப்பணைகளைக் கட்டுகின்ற பணியினைத் தடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

*முற்பகல் 11–15*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் ஒரு சிறிய மாவட்டம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் பாலாறு குறித்துப் பேசுவதாக இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால் வாய்ப்பு இல்லை, உட்காருங்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்கிறேன். பாலாறு பிரச்சினை தமிழகத்திலே மிக முக்கியமான ஒரு பிரச்சினையாக இருக்கிறது. நமக்கு தண்ணீர் இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பாலாற்றின் குறுக்கே 21 தடுப்பணைகள் கட்டுவதற்கு ஆந்திர அரசு முயற்சி செய்கிறது. அது நடைமுறைப்படுத்தப்பட்டால், நிச்சயமாக நம்முடைய தமிழக மக்களுக்கு தண்ணீரே கிடைக்காது. தண்ணீர் இல்லாது*

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2019 பிப்ரவரி 12

மக்கள் ** நிலை ஏற்படும். ஆகவே, ஆந்திர அரசு தடுப்பணை கட்டுகிற முயற்சியைக் கைவிடுவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அது ஆரம்ப கட்டத்திலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது ** என்று சொன்ன வார்த்தை அமங்கலமாக இருக்கிறது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நல்ல வார்த்தைகளாகப் பேசுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தண்ணீர் இல்லாத நிலை ஏற்படும். அதனால் நம்முடைய மக்கள்தான் கஷ்டப்படுவார்கள். இப்பொழுதே தண்ணீர் இல்லை. கர்நாடகத்தோடு உள்ள பிரச்சினை அப்படி இருக்கிறது. அவர்களும் தண்ணீர் தர மாட்டார்கள். ஆந்திர அரசும் தண்ணீர் தர மாட்டார்கள். தண்ணீர் என்பது natural resource; இறைவன் தருகிற தண்ணீர் நமக்குக் கிடைக்க வேண்டும். இந்த நாட்டின் இறையாண்மையைக் காக்கும் வகையில், நாட்டினுடைய எந்த மாநிலத்தில் தண்ணீர் இருக்குமென்றாலும் தமிழகத்திற்குத் தண்ணீர் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ஆகவே, நான் என்ன சொல்கிறேனென்றால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம், மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்தை ஈர்த்து உட்காருங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப கட்டத்திலேயே அதற்கான நடவடிக்கையை எடுத்து தமிழக மக்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1892 ஆம் ஆண்டைய மதராஸ்–மைசூர் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி, பன்மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகளில் பாலாறும் ஒன்றாகும். இந்த ஒப்பந்தத்தின்படி, மேல் பகுதியிலுள்ள மாநிலங்கள் கீழ்ப் பகுதியிலுள்ள மாநிலங்களின்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*2019 பிப்ரவரி 12]* [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

*முன்னனுமதியில்லாமல் எந்த அணை கட்டுமானத்தையோ அல்லது நீரைத் தடுப்பதற்கான கட்டுமானத்தையோ அல்லது நீரைத் திருப்புவதற்கும், நீரைத் தேக்குவதற்கும் உரிய எந்த ஒரு செயலையோ மேற்கொள்ள முடியாது.*

*சித்தூர் மாவட்டம், குப்பம் எனும் பகுதியில் பாலாற்றின் குறுக்கே ஓர் அணையினை ஆந்திர அரசு கட்டவுள்ளதாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் செய்தித் தாள்களில் 4–1–2006 அன்று தகவல்கள் வெளிவந்தபோது, 5–1–2006 அன்றே மாண்புமிகு அம்மா அவர்கள் 1892 ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தைச் சுட்டிக்காட்டி, ஆந்திர அரசு அணை கட்டும் பணியினை மேற்கொள்ளக் கூடாது எனக் கேட்டுக்கொண்டார்கள். மேலும், மத்திய அரசும் இப்பிரச்சினையில் தலையிட்டு தீர்வு காண வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆந்திர அரசு மற்றும் மத்திய அரசிடமிருந்து சாதகமான பதில் வராத நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு அரசால் 10–2–2006 அன்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வாறு வழக்கு தாக்கல் செய்ததன்பேரில், அணை கட்டும் பணிகள் தடுக்கப்பட்டன.*

*இந்த வழக்கில், தமிழ்நாடு மற்றும் ஆந்திர அரசு சாட்சியாளர்களின் குறுக்கு விசாரணை முடிவடைந்ததையடுத்து, உச்ச நீதிமன்றத்தால் இவ்வழக்கு ஜூலை 2019 ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*ஆந்திர அரசு, பெரும்பள்ளம் கிராமத்தில் அமைந்துள்ள தடுப்பணையின் உயரத்தைத் தன்னிச்சையாக உயர்த்தியுள்ளதாக செய்தி வந்தவுடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1–7–2016 அன்று உடனடியாக மாண்புமிகு ஆந்திர முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் ஆந்திர அரசின் இத்தகைய செயல் 1892 ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தை மீறும் செயலாகும் எனவும், உயர்த்தப்பட்ட தடுப்பணையின் உயரத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரவும், கூடுதலாக நீரைத் தேக்கி வைக்காமல் இருக்கவும் மற்றும் இயற்கையாக தமிழ்நாட்டிற்குள் வரக்கூடிய நீரை உறுதிப்படுத்தவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கவும் கேட்டுக்கொண்டார்கள். இதுகுறித்து மத்திய அரசுக்கும், ஆந்திர அரசுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன.*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 பிப்ரவரி 12

ஆந்திர அரசு, 1892 ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தை மீறும் வகையிலும், தமிழ்நாட்டின் முன்னனுமதி பெறாமலும் தன்னிச்சையாக பாலாறு மற்றும் அதன் கிளை நதிகளின் குறுக்கே கட்டப்பட்ட தடுப்பணைகளின் உயரத்தை உயர்த்தியும், புதியதாக தடுப்பணைகளைக் கட்டியது ஒப்பந்தத்திற்கு முரணானது எனவும், அவற்றை முன்பிருந்த நிலைக்கே கொண்டு வர வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று, தமிழ்நாடு அரசு 18–7–2016 அன்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்தது.

மத்திய நீர்வள ஆதார அமைச்சகம் 7–5–2018 அன்று பாலாறுப் பிரச்சினை குறித்து ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு அரசு அதிகாரிகளுடன் கூட்டம் நடத்தியது. இக்கூட்டத்தில், தமிழ்நாட்டின் நிலைப்பாடு மீண்டும் வலியுறுத்தப்பட்டது. பாலாற்றின் குறுக்கே சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவு பெறாமல் புதிய தடுப்பணைகளைக் கட்டுவதற்கு முனையக் கூடாது எனவும், இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு பிறப்பிக்கும் வரையில் ஆந்திர அரசு தடுப்பணைகளின் உயரத்தை மேலும் உயர்த்தக் கூடாது எனவும், மத்திய நீர்வள ஆதாரத் துறை செயலாளர் இக்கூட்டத்தின் முடிவில் தெரிவித்தார். மேலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை காத்திருக்க வேண்டும் எனவும் மாநிலங்களை அவர் கேட்டுக்கொண்டார்.

முற்பகல் 11–20

இதற்கிடையில், ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே உள்ள தடுப்பணைகளின் பழுதுபார்ப்பு மற்றும் மறுகட்டமைப்பிற்காக 41.75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டதாக செய்தித்தாள்களில் தகவல்கள் வெளியாயின. இதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு 13–11–2018 அன்று ஆந்திர அரசுக்கு அனுப்பிய கடிதத்தில், தடுப்பணைகளுக்கான விவரங்களை தமிழ்நாட்டின் பரிசீலனைக்காக அளிக்க வேண்டியும் மற்றும் தமிழ்நாடு அரசு அதன் கருத்துகளை அளிக்கும் வரையில் ஒப்புதல் வழங்கப்படுவதை நிறுத்தி வைக்க வேண்டியும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், மத்திய அரசு, இதுகுறித்து ஆந்திர அரசுக்கு உரிய அறிவுரைகள் வழங்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஆந்திர அரசிடமிருந்தோ அல்லது மத்திய அரசிடமிருந்தோ பதில் ஏதும் வரப்பெறாத நிலையில், பாலாற்றின் குறுக்கேயுள்ள

*2019 பிப்ரவரி 12]* [*திரு. எடப்பாடி கே. பழனிசாமி*]

*21 தடுப்பணைகளின் பழுதுபார்ப்பு மற்றும் மறுகட்டமைப்புப் பணிகளை உடனடியாக நிறுத்தக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், மனு ஒன்றை 19–11–2018 அன்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ளது.*

*ஆந்திர அரசு, பாலாற்றின் குறுக்கே மேலும் 30 புதிய தடுப்பணைகளைக் கட்ட உத்தேசித்திருப்பதாக 5–2–2019 அன்று செய்தி வந்ததையடுத்து, இத்தடுப்பணைகள் கட்டுவதற்கான அனுமதியை வழங்கக் கூடாது எனவும், உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் முடிவுக்கு வரும் வரையில் தடுப்பணைகள் கட்டப்படக் கூடாது எனவும், அவ்வரசின் நீர்வள ஆதாரத் துறைக்கு அறிவுரை வழங்குமாறு 6–2–2019 அன்று ஆந்திர அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.*

*பாலாறு நதிநீர்ப் பிரச்சினையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, மிக உன்னிப்புடனும், கவனத்துடனும், சட்டரீதியாகவும் பிரச்சினையை தொடர்ந்து அணுகி வருகிறது என்றும், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## (இ) கொடைக்கானல் நகராட்சி, மறு ஆய்வு முழுமைத் திட்டம் செயல்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள், நேற்றைக்கு இந்த அவையில் எழுப்பிய ஒரு சின்ன பிரச்சினைக்கு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு விளக்கம் அளிக்கவுள்ளார்கள். (குறுக்கீடு) அவர் நேற்றைக்கே பேசிவிட்டார். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.*

**திரு. ஐ.பி. செந்தில்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில், சர்வதேச சுற்றுலாத் தலமாக இருக்கக்கூடிய கொடைக்கானல் நகரப் பகுதியைப் பொறுத்தவரையில், 1993 ஆம் ஆண்டு ஒரு முழுமைத் திட்டம் அறிவிக்கப்பட்டு, அந்த முழுமைத் திட்டம் அறிவிக்கப்பட்ட ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, அங்கிருக்கக்கூடிய காலச்*